சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : 01

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : | சமய பண்பாட்டு அம்சங்களைக்கொண்ட தேசிய, சர்வதேச ரீதியில் தெரிவு செய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து, இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் | : | ·தெரிவுசெய்யப்பட்ட உண்ணாட்டுக் கலைஞர்களின் கலை நிர்மாணிப்புகளை நயந்துரைப்பார் |
| செயற்பாடு | : | எஸ்.பீ.சார்ள்ஸ் அவர்களின் நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம் |
| ஒப்படை | : | பின்வரும் வாசிப்பு படிவத்தை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக. |

## வாசிப்புப் படிவம்

### எஸ்.பீ. சார்ள்ஸ்

- 1916 மாத்தறை வெலிகம வில் பிறந்த எஸ்.பீ.சார்ல்ஸ் கொக்மாதுவே நாணயக்கார எனும் கலைஞனின் கீழ் சித்திரக் கலையை பயின்று அது தொடர்பான அறிவை வளர்த்துக்கொண்டார்.
- பாரம்பரிய பௌத்த ஓவியங்களை பிரதி பண்ணும் பணிக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பெருமளவு ஒத்துழைப்பு வழங்கிய கலைஞராவார்.
- ஏஸ்.பீ.சார்ள்ஸ் அவர்கள் 1944 இல் கொழும்பு தொழினுட்பக் கல்லூரியின் சித்திரக் கலைப்பிரிவின் ஜே.டீ.ஏ. பேரேராவிடம் சித்திரக்கலையைப் பயின்றார்.
- இலங்கை அரசாங்கத்தின் தேசிய கொடியினதும் பாராளுமன்றத்தின் குறியீடான செங்கோலினதும் நிர்மாணிப்புகளுக்காக அவர் வழங்கிய ஒத்துழைப்பு மிகவும் சிறந்தது.

### தேசிய கொடி

- தற்பொழுது பாவனையிலுள்ள தேசிய கொடி 1949 இல் நிர்மாணிக்கப்பட்டது.
- இலங்கையின் தனித்துவத்தையும் அபிமானத்தையும் பிரதிபலிக்கும் வகையில் தேசிய குறியீடுகளுடன் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தேசிய கொடியின் வர்ணங்களும் குறியீடுகளும் உணர்ந்தும் பொருள்



| | | |
|---|---|---|
| வாளேந்திய சிங்கம் | - | மகிமை, மேன்மை |
| வாள் | - | இறையாண்மை |
| நான்கு அரச இலைகள் | - | நான்கு வித நற்பண்புகள் (அன்பு, கருணை, அனுதாபம், சமத்துவம்) |
| செம்மஞ்சள் | - | தமிழ் இனம் |
| பச்சை | - | முஸ்லிம் இனம் |
| சிவப்பு | - | சிங்கள இனம் |

01. கலைஞர் எஸ்.பீ.சார்ள்ஸ் அவர்களைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

02. இலங்கையின் தேசிய கொடி எதனை பிரதிபலித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது?

03. தேசிய கொடியினை வரைந்து பொருத்தமான நிறம் தீட்டுக.

04. தேசிய கொடியில் ஒவ்வொரு குறியீடுகளும் பிரதிபலிக்கும் பொருளினை எழுதுக.